2022 ஜனவரி 7]

திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், திருப்பூண்டி சார் பதிவாளர் அலுவலகம் 138 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. இந்தச் சார் பதிவாளர் அலுவலகத்தை திருப்பூண்டியிலிருந்து வேறு இடத்திற்கு மாற்ற இருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இது பொது மக்களிடத்திலே அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கின்றது; போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற நடவடிக்கை அரசின் பரிசீலினையில் உள்ளதா, அப்படியிருப்பின் இதுகுறித்து மறுபரிசீலனை செய்யப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழமை வாய்ந்த பத்திரப் பதிவு அலுவலகத்தை மாற்றக்கூடிய கருத்து அரசுக்கு இல்லை. அதேநேரத்தில் தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய அனைத்து பத்திரப் பதிவு அலுவலகங்களையும் மக்களுடைய பயன்பாட்டிற்கு வசதியாக, அந்தத் தாலுகாவிற்கு உட்பட்டு, பதிவினுடைய எண்ணிக்கைக்கேற்ப ஆங்காங்கே புதிதாகப் பத்திரப் பதிவு அலுவலகம் அமைக்கப்பட இருக்கின்றது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

18—

புதிய சார் கருவூலம்

***703—டாக்டர் சி. சரஸ்வதி:**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி வட்டத்தில் புதிய சார் கருவூலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டத்தில் நாளது தேதியன்று சார் கருவூலம் ஏதும் செயல்படவில்லை. சார் கருவூலங்கள் இல்லாத வட்டத் தலைமையிடங்களில் புதிய சார் கருவூலங்கள் அமைப்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க அரசாணை (நிலை) எண் 324, நிதி (க.க.3)த் துறை, நாள் 27–9–2018–ன்படி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன்படி அமைக்கப்பட்ட ஈரோடு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டத்தில் புதிய சார் கருவூலம் அமைக்க ஆய்வு செய்து அளித்துள்ள அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது. அக்குழுவின் பரிந்துரையின்படி, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டத்தில் புதிய சார் கருவூலம் அமைப்பதற்கான கருத்துருக்கள் கருவூல கணக்கு ஆணையர்–CTA–அவர்களிடம் பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே, உரிய நடைமுறைகளைப் பின்பற்றிய பிறகு ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டத்தில் ஒரு புதிய சார் கருவூலம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி அவர்கள்.

டாக்டர் சி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். இந்தியாவை சிறப்பாக வழிநடத்தும் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. மோடி அவர்களை வணங்கி என் வினாக்களைத் தொடங்குகின்றேன். எனது மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட மொடக்குறிச்சி தாலுகாவானது, ஈரோடு தாலுகாவிலிருந்து பிரிக்கப்பட்டு, மொடக்குறிச்சி, கொடுமுடி என இரண்டு தாலுகாக்களாக பிரிக்கப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில் மொடக்குறிச்சி தாலுகாவில் அரசு கருவூலம் இல்லாத காரணத்தால், அரசு சம்பந்தப்பட்ட பணம் செலுத்துவதற்கு, அரசு அலுவலர்கள் ஈரோடு தாலுகா அலுவலகம் சென்று வர மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளது.

2022 ஜனவரி 7]
எனவே, பொது மக்களின் நன்மை கருதி, மொடக்குறிச்சியில் தாலுகா சார் கருவூலம் அமைத்துத் தருவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட கொடுமுடி தாலுகாவில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் அரசு கருவூலம், புதிதாகக் கட்டப்பட்ட அரசின் சொந்தக் கட்டடத்தில் விரைவில் செயல்பட அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த தாலுகாக்களில் சார் கருவூல அலுவலங்கள் இல்லையோ, அவற்றையெல்லாம் ஆய்வு செய்வதற்காகத்தான், அந்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மொடக்குறிச்சியில் ஓர் அலுவலகம் துவங்குவதற்கு ஏற்கெனவே பரிந்துரை உள்ளது. எனவே, உறுதியாக அதனை எவ்வளவு விரைவில் செயல்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவில் செயல்படுத்துவோம். பொதுவாக இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில், IFHRMS கொண்டுவந்த பிறகு, மேலும் வங்கிகளின் மூலமாகப் பணம் செலுத்துவதற்கும், பெறுவதற்கும் online மூலம் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் சூழ்நிலையில், physical distance, நேரில் சென்று கட்டும் வழிமுறைகளைக் குறைப்பதற்கான ஓர் அடிப்படையான புதிய விதிமுறையை உருவாக்க வேண்டுமென பல இடங்களில் கூறியிருக்கிறோம். All the way upto Payments Bank—நாமே ஒரு Payments Bank வாங்குவதற்கும், கட்டுவதற்கும், உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். எனினும் எந்தெந்த தாலுகாக்களில் சார் கருவூலம் இல்லையோ அங்கெல்லாம் உடனடியாக ஏதாவது ஒரு arrangement செய்வதற்கான நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டு இருக்கிறது.

அதேபோல் ஏற்கெனவே ஒரு கட்டடம் இருக்கிறது, அதில் மாற்றம் இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். அதனை கூடியவிரைவில் திருத்தி, முடிந்த அளவிற்கு

அனைத்து அலுவலகங்களும் அரசாங்கக் கட்டடத்திலேயே இயங்கும் வகையில் அரசு செயல்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி அவர்கள்.*

டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதில் எனக்கு மிகவும் திருப்தியாக உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் ஆகியோருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.* Jai Hind.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்கள்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மாண்புமிகு அம்மா அவர்களால் கடலூர் மாவட்டம், புவனகிரியில் புதிதாக வட்டம் உருவாக்கப்பட்டு வட்டாட்சியர் அலுவலகம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண்மொழிதேவன், கேள்விக்கு வாருங்கள். கருவூலம் வேண்டுமா? வேண்டாமா? அதை மட்டும் கேளுங்கள்.*

முற்பகல் 10–40

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத் தலைநகரில் இன்னும் கருவூலம் அமைக்கப்படாத காரணத்தினால், பொது மக்கள், அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் என அனைத்துத் தரப்பினரும் கருவூலம் இல்லாத நிலையில் பக்கத்திலுள்ள வட்டத் தலைநகருக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, புவனகிரியில் புதிதாகக் கருவூலம் அமைக்கப்படுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.*

2022 ஜனவரி 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல, அரசாணையின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, ஆங்காங்கே, தாலுகா தலைமையிடங்களில் எங்கெல்லாம் கருவூலம் இல்லை, எங்கெல்லாம் கருவூலம் தேவைப்படுகிறது என்ற பரிந்துரை பெறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறும் இடம் சம்பந்தமாக அந்த மாவட்டத்திலிருந்து என்ன பரிந்துரை வந்திருக்கிறது என்பது தற்போது தெரியவில்லை. அதனை அறிந்து, கருவூலம் அமைக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

19—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

*7385—**திரு. க.நா. விஜயகுமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் (வடக்கு) தொகுதி, பூலுவபட்டியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கென்று பல நெறிமுறைகளை